

**Madurai Symposium 2007**

**Advancing Development**

**Building Alliances**

**24-29 September**



செய்தியறிக்கை

செப்டம்பர் 27, 2007

# அமைதிப்புரட்சியை ஏற்படுத்தும் சுயஉதவிக்குழுக்கள்

மதுரைக் கூடலரங்கம் 2007 மூன்றாம் நாளின் நிகழ்வை முன்னிட்டு இன்று நடைபெற்ற தேசிய அளவிலான பெண்கள் சுயஉதவிக்குழுக் கூட்டமைப்புகளின் மூன்றாவது கருத்தரங்கு தமுக்கம் மைதானத்தில் நடைபெற்றது. ஆந்திரம், கர்நாடகம், இராஜஸ்தான், ஒரிசா, பிகார், மத்தியப்பிரதேசம் உள்ளிட்ட பிற இந்திய மாநிலங்களிலிருந்து ஏறக்குறைய ஐநூறுக்கும் மேற்பட்ட பெண் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். இந்திய குறுநிதிக்குழு கூட்டமைப்புகளுக்கான பேரிணையத்தின் முதன்மை நிர்வாகி சாந்தி மதுரேசன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

சிறப்புரையாற்றிய ரிசர்வ் வங்கியின் பொதுமேலாளர் பழனிச்சாமி, '1990களில் இந்தியாவில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அச்சமயம் நாட்டில் வைப்பாக இருந்த தங்கத்தை அடகு வைத்து கடன் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. தற்போது 19 இலட்சத்து 38 ஆயிரம் கோடி ரூபாய் நமது வங்கிகளில் டெபாசிட் செய்யப்பட்டுள்ளது. இதில் வேளாண்மைக்கு மட்டும் 2 இலட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் கடனாகத் தரப்பட்டுள்ளது. வங்கிகள் தேசியமயமாக்கப்படுவதற்கு முன்பு சிறிய திட்டங்களின் கீழ்தான் கடன்கள் வழங்கப்பட்டன. ஆனால் இன்று கடன் தன்மை பல்வேறு வகைகளில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்போது வங்கிகள் அளிக்கும் கடன் நேரடியாக வீட்டைத் தேடிச் செல்லும் நிலை உருவாகியுள்ளது. அனைத்து வங்கிகளும் மக்களுக்குக் கடன் தருவதற்குத் தயாராக உள்ளன. இந்த வாய்ப்பினை மக்கள் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்வதன் வாயிலாக தொழில் முதலீடு பெருமளவில் அதிகரிப்பதற்கான வாய்ப்பு ஏற்படும்' என்றார்.

ஆக்ஸ்பாம் இன்டர்நேசனல் திட்ட அலுவலர் அசுந்தா பேசும்போது, 'சுயஉதவிக்குழுக்களைச் சார்ந்த பெண்களே உலகின் சாதனைப் பெண்களாவர். தற்போது கிராமப்புறங்களைச் சார்ந்த பெண்களுக்கு தன்னம்பிக்கையும், ஆளுமை வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமன்றி வங்கிகளின் வளர்ச்சிக்கும் சுயஉதவிக்குழுக்களைச் சார்ந்த பெண்களின் பங்கு மகத்தானது. பெண்கள் ஒன்று சேர்ந்தால் அரசின் கொள்கையில் கூட மாற்றத்தினை ஏற்படுத்த முடியும் என்பதை இது போன்ற கூட்டுமுயற்சிகளே நிரூபிக்கின்றன' என்றார். இந்தியன் வங்கியின் மேலாண்மை இயக்குநர் சுந்தர்ராஜன் தனது தலைமையுரையில், 'தமிழ்நாட்டில் மட்டுமன்றி பல்வேறு மாநிலங்களிலும் வறுமைக்கெதிரான ஒரு புரட்சியை சுயஉதவிக்குழுக்களே ஏற்படுத்தியுள்ளன. அடித்தட்டு மக்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கு சுயஉதவிக்குழுக்கள் மிகப் பெரும் வாய்ப்பாகும். ஏறக்குறைய 35 கோடிப்பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். இந்நிலையில் அரசுத் திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள அடித்தட்டு மக்கள் முன் வர வேண்டும். ஒரு இலட்சம் அஞ்சலகங்கள் வாயிலாகவும், 1.3 இலட்சம் கூட்டுறவு வங்கிகள் வாயிலாகவும், 4 ஆயிரம் தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன' என்றார்.

தானம் அறக்கட்டளையின் அணித்தலைவர் இரமேஷ் சுயஉதவிக்குழுக் கூட்டமைப்புகள் குறித்துப் பேசினார். பேரிணையத்தின் திட்ட நிர்வாகி நரேந்திரன் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

மேற்காணும் செய்தியை தங்கள் நாளேட்டில் வெளியிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

தங்களன்புள்ள

இரா.சிவக்குமார்
ஊடக ஒருங்கிணைப்பாளர்